

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு
(2011-2012)

(பதினான்காவது பேரவை)

பத்தாவது அறிக்கை

10-01-2012 ஆம் நாளன்று திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள்: 23.MAY 2012)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை - 600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை



மனுக்கள் குழு

(2011 - 2012)

(பதினான்காவது பேரவை)

பத்தாவது அறிக்கை

10–01–2012 ஆம் நாளன்று திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

		பக்கங்கள்
1.	குழு உறுப்பினர்கள்	iii
2.	அறிக்கை	v
	இணைப்பு-I	1-30
	இணைப்பு-II	33-70
	இணைப்பு-III	73-74

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

(2011–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 3–ஆம் நாள் நியமனம் செய்யப்பெற்றது.)

தலைவர்

1. திரு. ப. மோகன்,
   அரசு தலைமை கொறடா

உறுப்பினர்கள்

2. திரு. ஆர். அருள்செல்வன்
3. திரு. பா. கணேசன்
4. திரு. ஆர். என். கிட்டுசாமி
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. டி. சுரேஷ்குமார்
7. திரு. ந. நஞ்சப்பன்
8. திரு. கே. பொன்னுசாமி
9. திரு. ஆ. ராமசாமி
10. திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி

* 11. டாக்டர் த. ஹரிதாஸ்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கு. இந்துமதி	..	துணைச் செயலாளர்
திரு. மா. கோபாலகிருஷ்ணன்	..	சார்புச் செயலாளர்.

* (13–01–2012 முதல்)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மனுக்கள் குழு

(2011-2012)

(பதினான்காவது பேரவை)

பத்தாவது அறிக்கை

முன்னுரை

2011–2012–ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் பத்தாவது அறிக்கையினை மனுக்கள் குழுவின் தலைவராகிய நான் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டம்

14–07–2011–ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை ஆய்வு செய்ய 10–1–2012–ஆம் நாளன்று அம்மாவட்டத்தில் குழுக் கூட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதிகளுக்குட்பட்டிருந்த 115 மனுக்கள் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவற்றின் மீது அறிக்கைகள் கோரப்பட்டன. அறிக்கைகள் பெறப்பட்ட மனுக்களில் 70 மனுக்கள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு விரிவான பதிலறிக்கைகள் தயாரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2012 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10 ஆம் நாளன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள சிறு கூட்ட அரங்கில் குழு கூடியது.

அக்கூட்டத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், முனைவர் இரா. செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரசுத் துறை அலுவலர்கள் குழு முன் பதிலளித்தனர். மனுதாரர்களும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

தெரிவுசெய்யப்பட்ட 70 மனுக்களை குழு ஆய்வு செய்தது. அவற்றுள் 30 மனுக்கள் குறித்து குழு தனது பரிந்துரைகளை அளித்தது. 36 மனுக்கள் மீது அளிக்கப்பெற்ற அரசுத் துறைகளின் பதிலுரைகள் படித்துப் பதிவு செய்யப்பெற்றன. மீதமுள்ள 4 மனுக்களுக்கான துறைகளின் பதிலுரைகளை ஏற்று அவை நிறைவேற்றப்பெற்றதாக கருதப்பட்டன.

குழு பரிந்துரை அளித்த மனுக்களின் விவரங்கள் இணைப்பு–I–இல் அளிக்கப்பட்டுள்ளன. படித்துப் பதிவு செய்யப்பெற்ற மனுக்களின் விவரங்கள் இணைப்பு–II–இல் அளிக்கப்பட்டுள்ளன. நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பட்ட மனுக்களின் விவரங்கள் இணைப்பு–III–இல் அளிக்கப்பட்டுள்ளன.

19–4–2012 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வறிக்கைக்குக் குழு தனது ஒப்புதலை அளித்தது.

ப. மோகன்,
தலைவர்,
மனுக்கள் குழு.

சென்னை–600 009,
19–4–2012,
சித்திரை திங்கள் 7–ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு–2043.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–I

குழுவினால் பரிந்துரை வழங்கப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
1	3671	திரு. எஸ். எஸ். சௌந்திரராஜன், தலைவர், கர்மவீரர் காமராஜர் மன்றம், களக்காடு.	12 வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட தார்சாலை தற்சமயம் குண்டும் குழியுமாகி புழுதியாகிவிட்டபடியால் சீரமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மேற்கண்ட பணி பொதுப்பணித்துறையை சார்ந்தது. எனவே, மேல் நடவடிக்கை எடுக்க இவ்வலுவலக அ3/2076/2011, நாள்: 19–12–2011–ன்படி செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை, தென்காசி இருப்பு குற்றாலம் வசம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ.), களக்காடு அவர்களின் கடித எண். அ3/2076/2011 நாள்: 19–12–2011.]*	மனுதாரர் தெரிவித்துள்ள சாலை சீரமைக்கும் பணியை வருகிற நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து மார்ச் அல்லது ஏப்ரல் 2012 மாதத்திற்குள் முடிக்க வேண்டும் என்று செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, தென்காசி அவர்களுக்கும், இப்பணியை குறிப்பிட்ட தேதிக்குள் முடிக்க கண்காணிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களுக்கும் குழு பரிந்துரை செய்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	3672	திரு. எஸ்.எஸ். சௌந்திரராஜன், தலைவர், கர்மவீரர் காமராஜர் மன்றம், களக்காடு	1993 புயலினால் சேதமடைந்து அகலம் குறைந்து விட்ட சாலையை சீரமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பொருளில் கொடுக்கப்பட்ட சாலை நெடுஞ்சாலைத்துறையை சார்ந்தது. எனவே சாலையை சீரமைப்பு செய்ய அசல் மனு இவ்வலுவலக அ3/2076/2011, 19–12–2011–ன்படி கோட்டப்பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை, திருநெல்வேலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. *[வட்டார வளர்ச்சி அலுவலர் (பஞ்), களக்காடு, அவர்களின் கடித எண். அ3/2076/2011, நாள், 19–12–2011.]*	மனுதாரர் தெரிவித்துள்ள மேற்படி சாலையினை வருகின்ற நிதியாண்டின் மார்ச் மாதத்திற்குள் சீரமைக்க வேண்டுமென்று கோட்டப் பொறியாளர் கஃ(ம)ப நெடுஞ்சாலை, திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
3	3673	திரு. எஸ். முருகன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர், இலத்தூர்–627 803, செங்கோட்டை வட்டம்.	இலத்தூர் சீவநல்லூர் ஒன்றிய சாலையை மேம்பாடு செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

மேற்படி சாலையானது PMGSY-Phase–8 திட்டத்தின் கீழ் ரூ. 59.10 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள் மூலம் சென்னை ஊரக வளர்ச்சி ஆணையரகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ), செங்கோட்டை அவர்களின் கடித எண். அ6/3644/2011, நாள்: 20–12–2011.]

குழுவின் பரிந்துரை

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்படி சாலையை மேம்பாடு செய்ய அரசிடமிருந்து அனுமதி வரப்பெற்றவுடன் பணியை தொடங்கி முடிக்குமாறு வட்டார வளர்ச்சி அலுவலர், செங்கோட்டை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	3674	திரு. எஸ். முருகன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர், இலத்தூர்–627 803.	இலத்தூர் – அச்சன்புதூர் சாலையில் உள்ள இலத்தூர் மறுகால் பாலம் மிகவும் குறுகிய பாலம். போக்குவரத்தினைக் கருத்தில் கொண்டு பாலத்தினை விரிவுபடுத்துவது அவசியம். பாலம் விரிவு படுத்தும் பொருட்டு நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்துள்ளனர். பழைய பாலத்தினை இடிக்காமல் பாலத்தின் பக்கவாட்டில் அகலப்படுத்தலாம் என கருத்து தெரிவித்துள்ளனர்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தென்காசி (நெ) க(ம)ப கோட்டம் பொறுப்பிலுள்ள செங்கோட்டை – பாவூர்சத்திரம் சாலை கி.மீ. 6/0–ல் பிரிந்து செல்லும் அச்சன்புதூர் சாலையில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள பாலம் அமைந்துள்ளது. இச்சாலையில் கி.மீ.0/4–ல் அமைந்துள்ள குறுகிய பாலம் திரும்ப கட்டப்பட வேண்டும். இப்பாலத்தினை ஒட்டி பொதுப்பணித்துறை மதகு உள்ளது. தற்போதைய பாலம் மிகவும் குறுகிய பாலம் அகலம் 3.00 மீட்டர். இப்பாலத்தின் தாங்கு சுவர் கற்சுவர். ஆர்சிசி பலகைபாலமாகும். (R.C.C. Slab narrow bridge over abutment in R.R. Masonry). போக்குவரத்தினை கருத்தில் கொண்டு பாலத்தினை அகலப்படுத்த வேண்டுவது மிகவும் அவசியம். சாலையின் நேர்பாட்டினை கருத்தில் கொண்டு, பொதுப்பணித்துறையின் மதகுகளை மாற்றி அமைப்பது அவசியமாகிறது. எனவே பழைய பாலத்தினை அகற்றி விட்டு புதியபாலம் சிமெண்ட் காங்கிரீட் தாங்குசுவர் மற்றும் ஆர்.சி.சி பலகை பாலம் அமைக்க தோராயமதிப்பீடு ரூ.100.00 லட்சம் இப்பாலப்பணி நபார்டு திட்டப்பணியில் (2011–12) மேற்கொள்ளும் பொருட்டு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. *[கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலை க (ம) ப, கோட்டம், தென்காசி அவர்களின் கடித எண் மற்றும் நாள் இல்லை]*	மனுதாரர் குறிப்பிட்டுள்ள மேற்படி பாலப்பணியினை வருகின்ற நிதியாண்டில் ஆகஸ்டு மாதத்திற்குள் முடிக்குமாறு கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை தென்காசி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	3678	திரு. டி. லாரன்ஸ் டேனியல், 8ஏ, பிரசன்ன விநாயகர் கோவில் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.	வஉசி மைதானத்தின் வடபுறம் உள்ள வாறுகாலில் பொது சுகாதாரம் பேணி காக்க காங்கிரீட் தளம் கொண்டு மூட ஆவன செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
வரும் நிதியாண்டில் நிதிநிலையினை கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் மேற்படி வாறுகாலில் கான்கிரீட் தளம் அமைப்பது குறித்த பணிக்கான ஒப்புதலை பெற்று மார்ச் 2012–க்குள் முடிக்கப்படும். *[உதவி ஆணையாளர் (பொ), பாளையங்கோட்டை மண்டலம், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் கடித எண். இ2/5112/ 2011/பா.வா., நாள்: 23–12–2011.]*	மனுதாரர் தெரிவித்துள்ள மேற்படி பணிகளை முடித்துத்தருவதற்கும் அத்துடன் வஉசி மைதானத்தின் அருகில் குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதிகளையும் செய்து தருமாறும் உதவி ஆணையாளர் (பொ), பாளையங்கோட்டை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
6	3689	திரு. ஆர். முத்துராமலிங்கம், 13, கணபதி இல்லம்., காந்தி நடுத்தெரு, பணகுடி.	நாகர்கோவிலில் இருந்து நீண்ட தூரங்களுக்கு இயக்கப்படும் அனைத்து, பேருந்துகளும் பணகுடி ஊருக்குள் வந்து செல்ல கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
கோரிக்கையின் படியான இயக்க தடங்கள் நாகர்கோவில்/மதுரை/ விருதுநகர்/திண்டுக்கல் ஆகிய மண்டலங்களைச் சார்ந்ததாக இருப்பதால் தக்க மேல் நடவடிக்கைக்காக மனு சம்பந்தப்பட்ட பொது மேலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. [பொது மேலாளர், த.நா.அ.போ.க. (திருநெல்வேலி)வது., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடித எண். 4012/பிளஸ்8/தநாஅபோக/திலி/2011–16, நாள்: 30–12–2011.]	நாகர்கோயிலிலிருந்து நீண்ட தூரங்களுக்கு இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் (Point to point தவிர) பணகுடி ஊருக்குள் வந்து செல்கிறதா என ஒரு ஆய்வாளரை நியமித்து கண்காணிக்க வேண்டுமென பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	3694	திரு. பி. பகவதி, 368, மகிழ்ச்சி நகர், திருநெல்வேலி–627 007.	நீண்ட நாள் பிரச்சினையாக உள்ள பாதாள சாக்கடையை சரி செய்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மேற்படி பகுதியில் தற்போது பாதாள சாக்கடை அடைப்பு ஏற்படும் இடங்களில் Sullage Lorry மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது. இம்மாநகராட்சியில் விடுபட்ட பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கையில் உள்ளதால் உரிய அனுமதி பெற்றவுடன் செயல்படுத்தப்படும் என்ற விபரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. *[உதவி ஆணையாளர், (பொ), மேலப்பாளையம் வார்டு அலுவலகம், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் கடித எண். இ1–12896–2011, நாள்: 20–12–2011.]*	பாதாள சாக்கடை வசதி செய்திட மனுதாரர் கோரியுள்ள இடத்தை பார்வையிட்டு, அதன் மீது தனி கவனம் செலுத்தி, உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாநகராட்சி ஆணையர், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
8	3700	திரு. எம் .பி. சைபு ரகுமான், வடகரை,	சரவணப் பொய்கை ஊரணியில் குப்பையினை கொட்டி செய்யப்படும் ஆக்கிரமிப்பை தடுத்து நிலத்தடி நீரினை பாதுகாக்கவும் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதை தடுக்கவும் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
வடகரை கீழ்பிடாகை பேரூராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்திட போதுமான இட வசதி இல்லாமையால் தற்போது நீர்பிடிப்பு இல்லாத சரவணப்பொய்கை மேல ஊரணியில் குப்பைகள் கொட்டப்பட்டு வரப்படுகிறது. பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான பொன்னாக்குடி புறம்போக்கு நிலத்தில் இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யவோ அல்லது நீண்ட நாட்கள் குத்தகைக்கோ தர கேட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் கிடைக்கும் பட்சத்தில் சரவணப்பொய்கை மேல ஊரணியில் குப்பைகள் கொட்டப்பட மாட்டாது என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. *[செயல் அலுவலர், முதல் நிலை பேரூராட்சி வடகரை கீழ்பிடாகை அவர்களின் கடித எண். 3825/2011/ப3, நாள் 12–12–2011]*	மனுதாரர் கோரியுள்ள பகுதியில் வாய்க்காலை கட் செய்து வேறு பகுதிக்கு விடுவதற்கு வாய்ப்பு இருப்பின், உடனடியாக இப்பணியினை ஆரம்பிக்குமாறு செயல் அலுவலர், முதல் நிலை பேரூராட்சி, வடகரை கீழ்பிடாகை அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	3708	திரு. ஜி. பாலகிருஷ்ணன், ஸ்ரீ ஞானி வளன் பவனம், லெட்சுமிபுரம், கோவிலூர்த்து (அஞ்சல்), (வழி) கடையம், திருநெல்வேலி மாவட்டம்.	பாபநாசம் – சங்கரன்கோவில் (வழி) இடைக்கால், பாப்பான்குளம், லெட்சுமிபுரம், பாவூர்சத்திரம், சுரண்டை தடத்தில் இயக்கப்பட்ட தடம் எண். 130பி பேருந்தை மீண்டும் இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பாபநாசம் – சங்கரன்கோவில் (வழி) இடைகால், பாப்பான்குளம், லெட்சுமிபுரம், பாவூர்சத்திரம், சுரண்டை வழித்தடத்தில் முன்னர் 2 பேருந்துகள் இயக்கப்பட்டு வந்தது. இப்பேருந்துகளில் போதிய பயணிகள் அடர்வு இன்றி இருந்ததால், மேற்படி பேருந்துகளில் ஒன்று 10 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டுவிட்டது. தற்போது, மேற்படி வழித்தடத்தில் இம்மண்டலப் பேருந்து ஒன்று நாளொன்றுக்கு 4 சுற்றுக்கள் முறையாக இயக்கப்பட்டு வருகிறது. எனவே, குறைந்த பயணிகள் அடர்வு காரணமாக பல வருடங்களுக்கு முன்பு நிறுத்தப்பட்ட பேருந்தை தற்போது மீண்டும் இயக்கவேண்டிய தேவை எழவில்லை. *[பொது மேலாளர், த.நா.அ.போ.க. (திருநெல்வேலி), வது., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின், கடிதம் எண்.4012/பிஎஸ்8/தநாஅபோக/திலி/2011–2, நாள்: 22–12–2011.]*	மனுதாரர் கோரியுள்ள தடம் எண்.130பி, பேருந்தை ஒரு மாத காலம் இயக்கிடவும், போதிய அளவு வருமானம் இல்லையென்றால் மீண்டும் பழைய நிலையையே தொடரலாம் என குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	3710	திரு. ஜி.எம். ஜான்சன், செயலாளர், மக்கள் நலச்சங்கம், 65, போத்திஸ் நகர், மகாராஜநகர் (அஞ்சல்), திருநெல்வேலி–11.	போத்திஸ் நகர் மேடான பகுதியாக உள்ளதால், தனியாக தண்ணீர் தொட்டி அமைத்து கொடுக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
புதிய குடிநீர் தொட்டி அமைப்பது தொடர்பாக திட்ட ஆய்வறிக்கை தயார் செய்து சாத்தியக்கூறுகள் இருப்பின் குடிநீர் தொட்டி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. *[உதவி ஆணையாளர் (பொ) பாளையங்கோட்டை மண்டலம், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் கடித எண். இ2/5112/ 2011/பா.வா., நாள்: 23–12–2011.]*	போத்தீஸ் நகர் பகுதிக்கு தண்ணீர் தொட்டி அமைக்கும் பணிக்கு, ஒரு மாத காலத்திற்குள் திட்டம் தீட்டி தண்ணீர் வழங்கவும், அது வரை தற்காலிகமாகவாவது ஒரு ஏற்பாட்டை செய்து தண்ணீர் கிடைக்க, நடவடிக்கை எடுக்குமாறு உதவி ஆணையர் (பொ) பாளையங்கோட்டை மண்டலம் திருநெல்வேலி மாநகராட்சி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
11	3714	திரு. க. திருமலை வேலுச்சாமி, ஜஸ் கடை முதல் மாடி, மெயின்ரோடு, கரிவலம்வந்தநல்லூர், சங்கரன்கோவில்.	கரிவலம்வந்தநல்லூர் ஊரின் தென்புறமுள்ள பொதுப்பணித் துறை குளத்தின் ஓரத்தில் நவீன கழிப்பிடம் கட்ட இடம் கோருதல்.

துறையின் பதிவுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
மனுவில் கோரியுள்ளபடி சங்கரன்கோவில் செயற்பொறியாளருக்கு (பொதுப்பணித்துறை) நீர்வழி ஆதாரத் துறை கழிப்பிடம் கட்ட இடம் வழங்க அனுமதி கேட்பது தொடர்பாக இவ்வலுவலக கடித எண்:அ2/4108/11, நாள்:19-2-2011 மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. *[சங்கரன்கோவில், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ந.க.எண். அ2/4108/11, நாள்: 19-12-2011.]*	திட்ட இயக்குநர் அவர்களும், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) சங்கரன்கோயில் அவர்களும் சேர்ந்து இடத்தை நேரடியாக சென்று ஆய்வு செய்து நவீன கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுக்க குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	3784	திரு. தென்றல். செள. முகையதீன், தலைவர், வாசகர் வட்டம், செயற்குழு உறுப்பினர், வியாபாரிகள் சங்கம், பொட்டல்புதூர் – 627 423, அம்பாசமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.	பொட்டல்புதூரிலிருந்து பாப்பான்குளம், இடைகால் வழியாக பேட்டை/நெல்லை நகரத்திற்கு கூடுதல் பேருந்து வசதி செய்யவும் பொட்டல்புதூரிலிருந்து ஆத்தங்கரைப்பள்ளிவாசலுக்கு நேரடிப் பேருந்து வசதி செய்திடக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தற்போது பொட்டல்புதூரிலிருந்து பாப்பான்குளம், இடைகால், பேட்டை வழியாக திருநெல்வேலி நகரம் செல்வதற்கு திருநெல்வேலி மண்டலத்தைச் சார்ந்த 7 பேருந்துகள் 54 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. இது தவிர தனியார் புறநகரப் பேருந்துகளும் உள்ளது. மேலும், பொட்டல்புதூரிலிருந்து அம்பாசமுத்திரம் வந்து பேட்டை மற்றும் திருநெல்வேலி நகரம் செல்வதற்கென இரு பேருந்துகளைப் பயன்படுத்திச்செல்லும்படியாகவும் பேருந்து வசதிகள் உள்ளன. எனவே, மனுவில் கேட்டுள்ளபடி பொட்டல்புதூர் – பேட்டை திருநெல்வேலி நகரம் என தனியாக பேருந்து வசதி செய்ய வேண்டிய அவசரத்தேவை எழவில்லை. பொட்டல்புதூரிலிருந்து ஆத்தங்கரைப்பள்ளி வாசலுக்கு நேரடிப் பேருந்து வசதி செய்யக் கேட்டுள்ளது குறித்து பரிசீலித்ததில், தற்போது பொட்டல்புதூரிலிருந்து திருநெல்வேலிக்கு இருவேறு வழிகளில் இயக்கப்படும் போதுமான பேருந்துகளைப் பயன்படுத்தி திருநெல்வேலிக்கு சென்று அங்கிருந்து ஆத்தங்கரைப்பள்ளிவாசலுக்கு இயக்கப்படும் நேரடிப் பேருந்து வசதிகளைப் பயன்படுத்த தற்போது போதியவசதிகள் உள்ளது. தவிரவும் பொட்டல்புதூரிலிருந்து ஆத்தங்கரைப்பள்ளிவாசலுக்கு நேரடிப் பயணிகள் அதிகம் இல்லை என்பதால் தற்போது இரு பகுதிகளாக உள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகும். *[பொது மேலாளர், த.நா.அ.போ.க. (திருநெல்வேலி), வது., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின், கடிதம் எண்.4012/பிஎஸ்8/தநாஅபோக/FL/2011–4, நாள்: 22–12–2011]*	பொட்டல்புதூரிலிருந்து பாப்பான்குளம், இடைகால் வழியாக பேட்டை/நெல்லை நகரத்திற்கு கூடுதல் பேருந்து வசதி செய்யவும் பொட்டல்புதூரிலிருந்து ஆத்தங்கரைப்பள்ளிவாசலுக்கு நேரடிப் பேருந்து வசதி செய்யவும் மனுதாரர் கோரியுள்ள கோரிக்கைக்கு ஏற்கெனவே இயக்கப்பட்டு வந்த பேருந்தினை ஒரு வார காலத்திற்குள் மீண்டும் இயக்கப்பட வேண்டுமென பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், திருநெல்வேலி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	3787	திரு. முத்துசாமி, தேவநல்லூர்–627 502, களக்காடு ஒன்றியம், திருநெல்வேலி மாவட்டம்.	(1) களக்காடு – மேலச்சடையமான்குளம் தடத்தில் இயக்கப்பட்ட சிற்றுந்தை மீண்டும் இயக்க கோருதல் 2) களக்காடு – சிங்கிகுளம் தடத்தில் புதிதாக நகரப்பேருந்து வசதி செய்ய கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
(1) சிற்றுந்தை மீண்டும் இயக்கக் கேட்டுள்ள கோரிக்கை குறித்து நடவடிக்கை எடுக்க ஏதுவாக இம்மனுவின் நகல் ஒன்று வட்டாரப் போக்குவரத்து அலுவலர், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (2) களக்காடு – தேவநல்லூர் – சிங்கிகுளம் தடத்தை உள்ளடக்கி தற்போது கீழ்கண்டபடி பேருந்து வசதிகள் உள்ளது. (அ) அரசு புறநகர் பேருந்துகள் 2 மூலம் – 1 4 சுற்றுக்கள் (ஆ) 3 தனியார் பேருந்துகள் மூலம் – 1 7 சுற்றுக்கள் மொத்தம் 3 1 சுற்றுக்கள் களக்காடு – சிங்கிக்குளம் வழித்தடத்தில் பேருந்து விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. *[பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (திருநெல்வேலி) வது, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 4012/பிஎஸ்8/தநாஅபோக/திலி/2011–5, நாள் 22–12–2011]*	மனுதாரர் கோரியுள்ள சிற்றுந்தை இயக்க நடவடிக்கை எடுக்குமாறும் சிற்றுந்துகள் ஒழுங்காக இயக்கப்படுகிறதா என்பதை மாதா மாதம் ஆய்வு செய்யவும் பொது மேலாளர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், திருநெல்வேலி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	3791	திரு. ஆர். சுப்பாராம், 72, காளியம்மன் கோவில் தெரு, மாவடிக்கால், கடையநல்லூர்–627 751.	திருநெல்வேலி மாவட்டம், கருப்பாநதி 4–ம் நீர்வரத்துக் கால்வாய் ஆக்கிரமிப்பு அகற்ற கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மனுதாரர் குறிப்பிட்டுள்ள கருப்பாநதி 4–ம் நீர்வரத்துக் கால்வாயின் ஆக்கிரமிப்புகளை கண்டறிவதற்கு வட்டாட்சியர் மூலம் நில அளவை செய்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகள் அகற்றப்படும் என்ற விபரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. *[செயற்பாறியாளர், நீ.ஆ.அ.பொ.ப.து., சிற்றாறு வடிநில கோட்டம், தென்காசி (இ) குடியிருப்பு அவர்களின் கடித எண். இவஅ–3/கோ.6பிநாள் 20–12–2011.]*	திருநெல்வேலி மாவட்டம், கருப்பா நதி 4–ம் –ம் நீர்வரத்துக் கால்வாய் ஆக்கிரமிப்பை வருகின்ற மார்ச், ஏப்ரல் மாதத்திற்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்வும் ஆர்.டி.ஒ. இதனை சரிபார்க்க வேண்டுமெனவும், இது குறித்து செயற்பொறியாளர், நீர் வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை மற்றும் ஆர்.டி.ஒ. இணைந்து ஆய்வு செய்து இப்பணியினை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	3792	The Welfare Association, NGO B Colony, Jawahar Nagar, Tirunelveli–627 007.	அங்கீகரிக்கப்பட்ட சாலை திட்டம்– திருநெல்வேலி மாநகராட்சி – மேலப்பாளையம் மண்டலம் பெருமாள்புரம் விஸ்தரிப்பு திட்டம் (1) 60 அடி சாலை ''ஏஏ'' சர்வே எண் 499–1 மற்றும் குலவணிகர்புரம் கிராமம் புதிய பேருந்து நிலையம் சாராள் தக்கர் கல்லூரி இணைப்பு சாலை நிறைவேற்றக் கோருதல்.

துறையின் பதிவுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
புதிய பேருந்து நிலையம் எதிரே உள்ள சாலையிலிருந்து எஸ்.டி.சி. சாலையை இணைக்கும் இணைப்புச் சாலையை அகலப்படுத்தி தார் சாலை அமைக்க மதிப்பீடு தயார் செய்ய நடவடிக்கையில் உள்ளது. தெரு விளக்குகளை அப்புறப்படுத்தி மின்வாரியம் மூலம் சாலை ஓரத்தில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. *[உதவி ஆணையாளர் (பொ), மேலப்பாளையம் வார்டு அலுவலகம், திருநெல்வேலி மாநகராட்சி. அவர்களின் கடித எண். இ1–12893–2011 நாள் 20–12–2011.]*	மனுதாரர் கோரியுள்ள இணைப்பு சாலைப் பணியினை நிறைவேற்றுவதற்கு எதிர்காலத்தில் ஏதாவது ஒரு புதுத் திட்டம் தீட்டி, பணியினை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உதவி ஆணையர் (பொ) மேலப்பாளையம் வார்டு அலுவலகம், திருநெல்வேலி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	3796	திரு. செ. பிச்சையா, ஊர் பொது மக்கள் சார்பில், பள்ளமடை., மானூர் அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம்.	திருநெல்வேலி தொகுதி மானூர் பள்ளமடை குளங்கள் பாசன வசதி பெற்றிட பாபநாசம் கடனாநதி அல்லது சிற்றாறு மூலம் கால்வாய் அமைத்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
பாபநாசம் அணையிலிருந்து மானூர் பள்ளமடை குளங்களுக்கு கால்வாய் அமைக்க தரை மட்ட அளவுகளின் படி சாத்தியமில்லை. எனவே கடனா நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீரை மானூர் பள்ளமடை குளங்களுக்கு கொண்டு செல்வதற்கான ஆய்வு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாத்தியமிருப்பின், மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும். *[செயற்பொறியாளர் பொ.ப.து., திட்டங்கள் திட்டமிடுதல் & வடிவமைப்பு கோட்டம் திருநெல்வேலி அவர்களின் கடித எண். 220 எம்/கோ2(தொ18) / நாள் 23–12–2011.]*	மானூர் பள்ளமடை குளங்கள் பாசன வசதி பெற்றிட பாபநாசம் கடனா நதி அல்லது சிற்றாறு மூலம் கால்வாய் அமைத்திட மாற்றுப்பாதையை கண்டறிந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க துரித நடவடிக்கை எடுக்குமாறு செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, திட்டங்கள் திட்டமிடுதல் மற்றும் வடிவமைப்பு கோட்டம், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
17	3799	திரு. ஆர். முருகையா, திருநெல்வேலி மாவட்ட தலைவர் (மேற்கு) மனித உரிமைக் கழகம், 1, சுப்பிரமணியன் தெரு, செங்கோட்டை 627 809, திருநெல்வேலி மாவட்டம்.	மதுபானக் கடை எண் 10705ஐ (தென்காசி) வேறு இடத்திற்கு மாற்றம் செய்தல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
மதுபானக் கடை எண் 10705ற்கு வேறு இடம் தேர்வு செய்யும்படி மேற்படி கடை மேற்பார்வையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே வேறு இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் மதுபானக் கடையை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். *[மாவட்ட மேலாளர் டாஸ்மாக் திருநெல்வேலி அவர்களின் கடித எண். அ4/2668/10 நாள் 15–12–2011.]*	மதுபானக்கடை எண். 10705ஐ வேறு இடத்திற்கு மாற்றிட விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட மேலாளர், டாஸ்மாக், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
18	3802	திரு. மீ. பாலகிருஷ்ணன், 79/26, சன்னதித் தெரு, சி.என்.கிராமம், திருநெல்வேலி–627 001.	திருநெல்வேலி சந்திப்புப் பகுதியில் உள்ள சி.என்.கிராமம் வழியாக இயக்கப்பட்டு வந்த தனியார் பேருந்துகள் M.P.R., M.G.G., மற்றும் அரசு மினி பேருந்து ஆகியவற்றை சி.என்.கிராமம் வழியாக இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் பரிந்துரை (6)
M.P.R., மற்றும் M.G.G., ஆகிய தனியார் நகரப்பேருந்துகள் சி.என்.கிராமம் வழியாக இயக்கக் கேட்டிருக்கும் கோரிக்கை சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இம்மனுவின் நகல் ஒன்று வட்டாரப் போக்குவரத்து அலுவலர், திருநெல்வேலி அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	மனுதாரர் கோரியுள்ள பேருந்தினை மீண்டும் உடனடியாக இயக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென பொது மேலாளர், தமிழ்நாடு, அரசு போக்குவரத்துக்கழகம், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (திருநெல்வேலி) வ.து., திருநெல்வேலி மண்டலத்தைச் சார்ந்த சிற்றுந்துவை பொறுத்தவரை, தற்போது திருநெல்வேலி சந்திப்பிலிருந்து காலை 9 மணி மற்றும் மாலை 3.30 மணி ஆகிய இரு நேரங்களில் சி.என்.கிராமம் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. மிகக்குறைந்த பயணிகள் அடர்வு காரணமாக ஏனைய நேரங்களில் அதிக போக்குவரத்து உள்ள மற்ற பகுதி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இந்த சிற்றுந்து தற்போது இயக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், கோரிக்கையின் முக்கியத்துவம் கருதி இப்பேருந்தை 07.05 மணி மற்றும் 19.30 மணி ஆகிய இரு நேரங்களில் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து சி.என். கிராமம் வழியாக மலையாளமேடு வரை 23–12–2011 முதல் இயக்க உத்தரவிடப்பட்டுள்ளது.	
[பொது மேலாளர், த.நா.அ.போ.க. (திருநெல்வேலி)வ.து. வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 4012/பிஎஸ்8/தநாஅபோக/திலி/2011–10 நாள் 22–12–2011.]	

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	3807	திரு. க. பெரியசாமி, தலைவர் குண்டாறு நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், செங்கோட்டை.	குண்டாறு நீர்த்தேக்கத்தினை தூர்வாரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
குண்டாறு அணையில் மணல்குவாரி அமைத்து தூர்வாரப்பட்டு வருகிறது. தற்பொழுது நீர் நிறைந்துள்ளது. நீர்மட்டம் குறையும் பட்சத்தில் மீண்டும் மணல்குவாரி அமைத்து அணையை தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *[செயற்பாறியாளர், நீ.ஆ.அ.பொ.ப.து., சிற்றாறு வடிநிலக் கோட்டம், தென்காசி (இ) குடியிருப்பு. அவர்களின் கடித எண். இவ.அ–3/கோ.6பி/ நாள் 20–12–2011.]*	குண்டாறு நீர்த்தேக்க தூர்வாறும் பணி முக்கியமான கோரிக்கையாக இருப்பதால் வருகிற மார்ச், ஏப்ரல் மாதத்திற்குள் தூர்வார உரிய நடவடிக்கை எடுக்க செயற்பொறியாளர், நீர்வள ஆதார அமைப்புத்துறை, தென்காசி (இ) குடியிருப்பு அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	3810	வடபிலாறு கால்வாய் நீர்ப்பாசன கமிட்டி & வடபிலாறு கால்வாய் விவசாயிகள், தெற்கு கல்லிடைகுறிச்சி கிராமம், கல்லிடைகுறிச்சி–627 416, அம்பாசமுத்திரம் தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்.	வடபிலாறு கால்வாய் சீர்திருத்தம் செய்து பாசன வசதி செய்து தர கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(5)
மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அம்பாசமுத்திரம் வட்டம் தெற்கு கல்லிடைகுறிச்சி கிராமம் வடபிலாறு கால்வாய் இருபுறமும் சிமெண்ட் கான்கிரீட் சுவர் மற்றும் ஷட்டர் அமைத்துக் கொடுக்க மதிப்பீட்டுத் தொகை சுமார் 35.00 இலட்சம் ஆகும். மேலும் மூலச்சி குளம் மறுகால் முகப்பில் ஷட்டர் அமைக்க மதிப்பீட்டுத்தொகை சுமார் 4.00 இலட்சம் ஆகும். எனவே மேற்படி பணிகளுக்காக சிறப்பு நிதி ஆதாரம் ஏதும் கிடைக்கப்பெற்றால் மேற்படி பணியை மேற்கொள்ள இயலும். *[செயற்பொறியாளர், பொ.ப.து/ நீ.ஆ.அ. தாமிரபரணி வடிநிலக் கோட்டம் திருநெல்வேலி அவர்களின் கடித எண் வ1/கோ.77/ 2011 நாள் 23–12–2011.]*	வடபிலாறு கால்வாய் சீத்திருத்தம் செய்து பாசன வசதி செய்துத்தர உரிய நிதியைப் பெற்று துரித நடவடிக்கை எடுத்து பணியை முடிக்குமாறு செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, தாமிரபரணி வடிநிலக்கோட்டம், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
21	3813	திரு. து. வீரபாண்டியன், சமூக பணியாளர், மருதகுளம் (அஞ்சல்) – 627 151, திருநெல்வேலி மாவட்டம்.	திருவைகுண்டத்திலிருந்து ஆதித்தநல்லூர், கால்வாய், வல்லகுளம், அரசர்குளம் சேரகுளம், ராமானுஜம்புதூர், நாகல்குளம், பெருமாள்நகர், மூலைக்கரைப்பட்டி, கருப்புக்கட்டி, மருதளகுளம் வழியாக மூன்றடைப்பு வரை புதிய வழித்தடத்தில் நகரப்பேருந்து இயக்கக் கோருதல்.

துறையின் பதிலுரை

(5)

கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள வழித்தடம் ஒரு சுற்று வழித்தடமாகும். தவிரவும் தற்போது கோரிக்கையில் உள்ள வழித்தடப்பகுதி பொது மக்கள் பயன்பெறும் வகையில் தற்போது கீழ்கண்டபடி பேருந்து வசதிகள் உள்ளன.

(1) தடம் ஏண். 2எ:– ஸ்ரீவைகுண்டம் – கோடன்குளம் (வழி ஆதித்தநல்லூர், கொங்கராயக் குறிச்சி விலக்கு, கருங்குளம், வல்லகுளம் ரைஸ்மில், அரசர்குளம் விலக்கு, சேரகுளம், நாகல்குளம், முனைஞ்சிபட்டி – 4 சுற்றுக்கள்

(2) தடம் எண். எம்5 & எம்39:– திருநெல்வேலி ஜங். – தெய்வநாயகபேரி (வழி) மூன்றடைப்பு, மருதகுளம், கருப்புகட்டி – 12 சுற்றுக்கள்

(3) தடம் எண். 44எ:– ஸ்ரீவைகுண்டம் – குருங்குளம் (வழி) கால்வாய் – 8 சுற்றுக்கள்

மேற்கூறியபடி தற்போது பேருந்து வசதிகள் உள்ளதால், மனுவில் கேட்டுள்ளபடி புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கத் தேவை இல்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது.

[பொது மேலாளர், த.நா.அ.போ.க.(திருநெல்வேலி)வது., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 4012/பிஎஸ்8/தநாஅபோக/திலி/2011–8 நாள் 22–12–2011.]

குழுவின் பரிந்துரை

(6)

மனுதாரர் கோரியுள்ள பேருந்தை இயக்குவதற்கு 1 கி.மீ. தூரத்திற்கு சாலை வசதி செய்துகொடுக்க யூனியன் நிதியிலிருந்து ஒதுக்கிக் கொடுத்து அப்பணியினை நிறைவேற்ற வேண்டுமென பொது மேலாளர், தநா.அ.போ.க., திருநெல்வேலி அவர்களுக்கும், யூனியன் தலைவர் அவர்களுக்கும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் கருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	3814	திரு. து. வீரபாண்டியன், சமூக பணியாளர், மருதகுளம் அஞ்சல்–627 151, திருநெல்வேலி மாவட்டம்.	திருநெல்வேலி சந்திப்பு முதல் மூலைக்கரைப்பட்டி வரை மேலப்பாளையம், மூன்றடைப்பு, வடக்கு பத்தினிப்பாறை, மருதகுளம், தெய்வநாயகப்பேரி வழியாக புதிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
ஏற்கனவே திருநெல்வேலி சந்திப்பிலிருந்து மூன்றடைப்பு, மருதகுளம் வழியாக தெய்வநாயகப்பேரி வரை இம்மண்டல நகரப்பேருந்து ஒன்று நாளொன்றுக்கு 6 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி பேருந்து செல்லும் சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக அமைந்துள்ள வடக்குப் பத்தினிப்பாறை பொது மக்கள் பிரதான சாலைக்கு வந்து இப்பேருந்தைப் பயன்படுத்த தற்போது வசதிகள் உள்ளது. ஆகவே, கோரிக்கையில் கேட்டுள்ளபடி புதிதாக நகரப் பேருந்து இயக்க வேண்டிய உடனடித் தேவை ஏதுமில்லை என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. *[பொது மேலாளர், த.நா.அ.போ.க (திரு நெல்வேலி) வது, வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 4012/பிஎஸ்8/தநாஅபோக/திலி/2011–13 நாள்: 22–12–2011.]*	திருநெல்வேலி சந்திப்பு முதல் மூலைக்கரைப்பட்டி வரை மேலப்பாளையம், மூன்றடைப்பு, வடக்கு பத்தினிப்பாறை, மருதகுளம், தெய்வநாயகப்பேரி வழியாக புதிய வழித்தடத்தில் நகரப்பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்குமாறு பொது மேலாளர், த.நா.அ.போ.க, திருநெல்வேலி அவர்களுக்கு குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	3816	திரு. து. வீரபாண்டியன், சமூக பணியாளர், மருதகுளம் அஞ்சல்–627 151, திருநெல்வேலி மாவட்டம்.	தடம் எண் 5–எம் திருநெல்வேலி சந்திப்பு–தெய்வநாயகப்பேரி நகர பேருந்தை மூன்றடைப்பு வடக்கு பத்தினிப் பாறை மருதகுளம் வழியாக 6 சுற்றுக்கள் இயக்கக் கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)

கோரிக்கையில் சொல்லப்பட்டுள்ள தடம் எண் எம்–5 எனும் நகரப்பேருந்து தற்போது கீழ்கண்ட பல் முனை வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது.

1) திருநெல்வேலி சந்திப்பு–தெய்வநாயகப்பேரி (வழி) மூன்றடைப்பு, மருதகுளம் – 6 சுற்றுகள்

2) திருநெல்வேலி சந்திப்பு–பொன்னாகுடி (வழி) மேலப்பாளையம், என்.ஜி.ஓ. காலனி – 4 சுற்றுகள்

3) திருநெல்வேலி சந்திப்பு–ஆனையார்குளம் சுற்றுகள் (வழி) பாளையம்கோட்டை, பொன்விழாநகர் – 6

4) திருநெல்வேலி சந்திப்பு–கேடி.சி. நகர் – 2 சுற்றுகள்

இதில் தெய்வநாயகப்பேரிக்கு இயக்கப்படும் 6 சுற்றுக்களை வடக்கு பத்தினிப்பாறை, வழியாக தடம் மாற்றி இயக்க கேட்கப்பட்டுள்ளது. கோரிக்கைப்படி தடம் மாற்றி இயக்கினால் தற்போது பயன் பெற்று வரும் தோட்டாக்குடி எனும் கிராம மக்களுக்கு சுற்றுகள் இழப்பு ஏற்பட்டு அதனால் பிரச்சனைகள் உருவாக வழிவகுக்கும்.

வடக்கு பத்தினிப்பாறை கிராமமானது தற்போது தடம் எண். M–5 இயக்கப்படும் சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக அமைந்துள்ளது. அகவே, இக்கிராம மக்கள் பிரதான சாலைக்கு வந்து இருப்பேருந்தைப் பயன்படுத்த வாய்ப்புக்கள் உள்ளது.

எனவே தடம் எண். M–5 தடம் மாற்றி இயக்கவேண்டிய தேவையோ அல்லது வாய்ப்புக்களோ இல்லை.

[பொது மேலாளர், த.நா.அ.போ.க (திருநெல்வேலிவது., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 4012/பிஎஸ்8/தநா.அபோக/திலி/ 2011–12 நாள் 22–12–2011.]

மனுதாரர் கோரியுள்ள தடம் எண். 5 இனை இயக்கிட மருதகுளத்தை மையமாக வைத்து இத்திட்டங்களை நிறைவேற்றிட திட்ட இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் உறுதுணையாக இருந்து செய்து கொடுக்க வேண்டுமென்றும் பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், திருநெல்வேலி அவர்களுக்கும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
24	3818	திருமதி. ந. சுப்பு லெட்சுமி, த/பெ. நல்லகண்ணு 35ஏ, எம்.கே.டி. தெரு, சேரன்மகாதேவி.	6வது வார்டு எம்.கே. தியாகராஜபாகவதர் தெரு, இருபுறமுள்ள வீடுகளில் உள்ள கழிவு நீர்கள் சீராக செல்ல வாறுகால் கட்டித் தரக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
தற்போது மேற்படி தெருவில் உள்ள கழிவு நீர்களை அகற்றவும், கொசு கிருமி நாசினி மருந்து கொண்டு நோய் வர வாய்ப்பு இல்லாத வண்ணம் மருந்து அடித்து வருகிறது. மேலும் வரும் திட்டப்பணியில் மேற்படி தெருவில் வாறுகால் கட்ட முன்னுரிமை அளிக்கப்பட்டு, மேற்படி வேலையினை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. *[செயல் அலவலர் தேர்வு நிலை பேரூராட்சி சேரன்மாகதேவி – 627 414 திருநெல்வேலி மாவட்டம் அவர்களின் கடித எண். 3825/2011/ப3.]*	எம்.கே. தியாகராஜபாகவதர் தெரு இருபுறமுள்ள வீடுகளில் உள்ள கழிவு நீர் சீராக செல்ல வாறுகால் கட்டும் பணியினை செய்து முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு செயல் அலுவலர், தேர்வு நிலை பேரூராட்சி, சேரன்மகாதேவி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
25	3820	திரு. V. இளங்கோ ஜெகதீஸ், த/பெ. எஸ். வேலைய்யா, 23, கலந்தபனை (அஞ்சல்), பணகுடி வழி– 627 109.	கலந்தபனையில் நாகர்கோவில் – மதுரை வழித்தடப் பேருந்துகள் அனைத்தும் நின்று செல்ல கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கோரிக்கையின் படியான இயக்க தடமானது நாகர்கோவில்/மதுரை/ விருதுநகர்/திண்டுக்கல் மண்டலங்களைச் சார்ந்ததாக இருப்பதால் தக்க மேல் நடவடிக்கைக்காக மனு சம்பந்தப்பட்ட பொது மேலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. *[பொது மேலாளர், த.நா.அ.போ.க (திருநெல்வேலி)வது., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 4012/பிஎஸ்8/தநாஅபோக/நிலை1/2011–17 நாள் 22–12–2011.]*	நாகர்கோவில் மதுரை வழித்தடத்தில் செல்லும் பேருந்துகள் அனைத்தும் கலந்தபனையில் நின்று செல்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், பேருந்துகளில் கலந்தபனையில் நிற்கும் என போர்டில் எழுதி ஒட்டுமாறும், பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், நாகர்கோவில் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
26	4009	திரு. வி.பி.எம். செல்வி மூர்த்தி பேரூராட்சி மன்றத் தலைவர் சாம்பவர் வடகரை–627 856, திருநெல்வேலி மாவட்டம்.	திருநெல்வேலி மாவட்டம் சாம்பவர் வடகரை பேரூராட்சி – விரிவாக்கப் பகுதியில் 5 இலட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் புதிய பைப்லைன் அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
இப்பணி மேற்கொள்ள பேரூராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத நிலையில் இப்பணியை பொதுமக்களின் அத்தியாவசிய பணியாக பேரூராட்சி கருதுவதால் அரசு நிதி ஒதுக்கீடு வழங்கப்பெற்று பணி மேற்கொள்ள இயலும் என்ற விபரம் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. *[செயல் அலுவலர், முதல் நிலை பேரூராட்சி சாம்பவர்வடகரை. அவர்களின் கடித எண். ந.க.எண். 3825/2011/ப3, நாள் 14–12–2011.]*	சாம்பவர் வடகரை பேரூராட்சி விரிவாக்கப்பகுதியில் 5 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் புதிய பைப்லைன் அமைக்கும் பணியினை வருகின்ற நிதியாண்டில் (2012–2013) செய்ய நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி அவர்களுக்கும், இதற்கான கருத்துருவை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பிவைக்குமாறு செயல் அலவலர், சாம்பவர் வடகரை பேரூராட்சி அவர்களுக்கும் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
27	4010	திரு. ச. சிவனையா, D.E.C.E., தெற்கு சங்கரன்கோவில் ஊராட்சி, சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம்.	சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் – தெற்கு சங்கரன்கோவில் ஊராட்சி – தளவாய்புரம் கிராமத்திற்கு புதிய திறந்த வெளிக்கிணறு அமைக்க கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியம் – தெற்கு சங்கரன்கோவில் ஊராட்சி தளவாய்புரம் கிராமத்தின் மக்கள் தொகை 2006 ஆம் ஆண்டு வாரிய மறு ஆய்வின்படி 450 ஆகும். இதன் தற்போதைய மக்கள் தொகை 477 ஆகும். இக்கிராமத்தின் தற்போதைய குடிநீர் தேவை நாள் ஒன்றுக்கு 19080 லிட்டர் ஆகும். இக்குடியிருப்பில் 30,000 லிட்டர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இம்மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியில் தகுவவாரியம், பராமரிப்பு கோட்டம், திருநெல்வேலி மூலமாக பாமரிக்கப்பட்டு வரும் மானூர் கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் நீரேற்றப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், மனுதாரர் கோரியுள்ளபடி கோடை கால தேவைக்கு திறந்த வெளிக்கிணறு அமைக்கும் சிறப்புத் திட்டம் எதுவும் வாரியத்தால் தற்போது செயல்படுத்தவில்லை. *[நிர்வாகப் பொறியாளர், தகுவவாரியம், கி.கு.தி. கோட்டம், திருநெல்வேலி கடித எண். கோ.ச.ம.ம.குழு/ஊவ/2011/நாள் 22–12–2011,]*	தெற்கு சங்கரன்கோவில் ஊராட்சி தளவாய்புரம் கிராமத்திற்கு அபிவிருத்தி திட்டம் வாயிலாக ஆழ்துளை கிணறு அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கி.கு.தி. கோட்டம், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
28	4015	திரு. S.P.R. ரவீந்திரன், தலைவர், காமராஜர் மக்கள் நலப்பேரவை, 4, மெயின் ரோடு, மேலமெஞ்ஞானபுரம்–627 814, தென்காசி தாலுகா, திருநெல்வேலி.	மேல மெஞ்ஞானபுரத்தில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்லக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
திருநெல்வேலி – தென்காசி பிரதான சாலையில் உள்ள மேல மெஞ்ஞானபுரம் நிறுத்தத்தில் அதன் வழியாக இயக்கப்படும் அனைத்து நகர மற்றும் சாதாரண புறநகர் பேருந்துகளும் நின்று செல்ல வேண்டும் என்ற உத்தரவு ஏற்கனவே நடைமுறையில் உள்ளது. தற்போது மேற்படி நிறுத்தத்தில் பேருந்துகள் நிற்காமல் செல்கின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து மேல மெஞ்ஞானபுரம் நிறுத்தத்தில் சாதாரண புறநகர் மற்றும் நகரப்பேருந்துகள் அனைத்தும் நின்று செல்ல ஏதுவாக சுற்றறிக்கை வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், மேல மெஞ்ஞானபுரத்தில் அனைத்துப் பேருந்துகளும் நின்று செல்ல வேண்டிய தேவை எழவில்லை. *[பொது மேலாளர், த.நா.அ.போ.க (திருநெல்வேலி)வது., வண்ணார்பேட்டை, திருநெல்வேலி அவர்களின் கடிதம் எண். 4012/பிஎஸ்8/தநாஅபோக/திலி/2011–11 நாள் 22–12–2011.]*	மேல மெஞ்ஞானபுரத்தில் அனைத்து பேருந்துகளும் நின்று செல்கிறதா என கண்காணித்து அதனை உறுதி செய்து அது குறித்த அறிக்கையினை மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று பொது மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், திருநெல்வேலி அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
29	4016	கே.எம். பாலகிருஷ்ணன் த/பெ. மாடசாமி நாடார், 19 நாடார் தெரு, கரிவலம்வந்தநல்லூர்.	கரிவலம் வந்தநல்லூர் 7–வது வார்டில் குடிநீர் முறையாக வழங்கக் கோருதல்

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கரிவலம் வந்தநல்லூர் 7–வது வார்டுக்கு குடிநீர் தற்போது முறையாகவும், போதுமான அளவும் வழங்கப்படுகிறது. [சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) ந.க.எண். அ2/4108/11 நாள் 19–12–2011.]	கரிவலம்வந்த நல்லூர் 7–வது வார்டில் குடிநீர் முறையாக வழங்குவதற்கு உண்டான மதிப்பீடுகளை தயார் செய்யும் பணி உட்பட அனைத்துப் பணிகளையும் 30 நாட்களுக்குள் முடித்துவிட்டு, வீட்டுக் குடிநீர் சீராக கிடைப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார ஊராட்சி, சங்கரன்கோவில் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	மனு எண்.	மனுதாரரின் பெயரும் முகவரியும்.	மனுவின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
30	4017	திரு. பா. சேதுராமன் 6/14, மெயின்ரோடு, கீழவீராணம் வீ.கே.புதூர்.	குடிநீர் சீராக வழங்கக் கோருதல்.

துறையின் பதிலுரை	குழுவின் பரிந்துரை
(5)	(6)
கீழவீராணம் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 2001–ன்படி 6520 ஆகும். மேற்படி கிராமத்திற்கு 13 ஆழ்குழாய் கிணறு மற்றும் 22 சின்டெக்ஸ் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இது தவிர 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலம் (கொள்ளளவு 1,00,000லி, 60,000லி, 10,000லி மற்றும் 10,000லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மூலமும் தினசரி அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பிலும் எதிர்காலத்தில் மக்களின் அவசியத்திற்காக மேலும் 2 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் அமைக்க ஆவன செய்யலாம் என்ற விபரம் சமர்ப்பிக்கப்படுகிறது. *[ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் அவர்களின் கடித எண். அ5/0005/2012 நாள் 02–01–2012]*	மனுதாரர் கோரியுள்ள இடத்தில் குடிநீர் சீராக வழங்க இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைக்கும் பணியினை செய்து தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், ஆலங்குளம் அவர்களுக்குக் குழு பரிந்துரை செய்கிறது.

இணைப்பு–II

குழுவினால் படித்துப் பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II

குழுவினால் படித்து பதிவு செய்யப்பட்ட மனுக்கள் குறித்த விவரங்கள்

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
1	3676	திரு. இரா. சுப்பிரமணியன், ம.தி.மு.க. செயலாளர், ஊராட்சி துணைத் தலைவர், இலத்தூர் ஊராட்சி இலத்தூர்–627 803, செங்கோட்டை வட்டம்.	இலத்தூர் கிராமம் பெரிய குளத்தில் உள்ள பழுதடைந்த மடைகளை சீரமைத்தல்

துரையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
இக்குளம் பொதுப்பணித்துறையை சார்ந்தது. எனவே பொதுப்பணித் துறைக்கு அசல் மனு செங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் கடித எண். அ6/3644/2011, நாள் 20–12–2011–ன் படி அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. *[வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) செங்கோட்டை அவர்களின் கடித எண். அ6/3644/2011 நாள்: 20–12–2011]*	இலத்தூர் கிராமம் பெரிய குளத்தில் உள்ள பழுதடைந்த மடைகளை 2012 மார்ச் மாதத்திற்குள் முடித்துத் தருவதாக செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு அவர்கள் தெரிவித்துள்ளதை தொடர்ந்து, துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

வரிசை எண். (1)	மனு எண். (2)	மனுதாரரின் பெயரும் முகவரியும். (3)	மனுவின் சுருக்கம். (4)
2	3677	திரு. கே. மாரியப்பன், ம.தி.மு.க. செயலாளர் சீவநல்லூர், இலத்தூர் அஞ்சல், செங்கோட்டை தாலுகா.	இலத்தூர் அச்சன்புதூர் சாலை மற்றும் இலத்தூர் – தென்காசி சாலை அகலப்படுத்தி தார் விரித்து செப்பனிட்டு தரக்கோருதல்.

துறையின் பதிலுரை (5)	குழுவின் குறிப்புரை (6)
மேற்குறிப்பிட்ட சாலையானது செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்தது அல்ல. நெடுஞ்சாலைத் துறையை சார்ந்தது. எனவே அசல் மனு நெடுஞ்சாலைத்துறைக்கு செங்கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் கடித எண் அ6/3644/2011 நாள் 20–12–2011–ன்படி அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. [வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.உ) செங்கோட்டை அவர்களின் கடித எண். அ6/3644/2011 நாள் 20–12–2011.]	மேற்படி இரண்டு பணிகளையும் மார்ச் 2012–க்குள் முடித்து விடுவதாக கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை அவர்கள் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து, துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

